அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இலக்கம்: 07/2010

எனது இல.தா/9/6/ஒவி/2-2(V)
அரசாங்க நிர்வாக
உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07.
2010.06.22

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
மாகாண சபைகளின் தலைமைச் செயலாளர்கள்,
மற்றும் திணைக்களத் தலைவர்கள் யாவருக்கும்.

**விசாரணை நியாய சபைகளை நியமனம் செய்கின்ற போது தேவைப்படும் தகைமைகளை திருத்தம் செய்தல் தாபன விதிக் கோவையில் தொகுதி II இன் அத்தியாயம் XLVIII**

தாபன விதிக்கோவையில் தொகுதி II அத்தியாயம் XLVIII இன் 19:4 மற்றும் 19:5 ஆகிய பிரிவுகளை திருத்தம் செய்வதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

02. அதன்படி தாபன விதிக்கோவையில் தொகுதி II அத்தியாயம் XLVIII இன் 19:4 மற்றும் 19:5 ஆகிய உப பிரிவுகளைப் பின் குறிப்பிட்டுள்ளவாறு திருத்தம் செய்யப்படுகிறது.

19:4 ஒழுங்காற்று அதிகாரியானவர், அரச சேவையிலுள்ள அலுவலரொருவரை ஒழுங்காற்று விசாரணையின் நியாய சபையாக நியமிப்பதாயின், சம்பந்தப்பட்ட அலுவலர் தனது சேவைக் காலத்தில் தாபன விதிக்கோவையின் முதலாம் அட்டவணையின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள குற்றமொன்றுக்கு தண்டனை விதிக்கப்படாதவராக இருத்தல் வேண்டும் அல்லது தனது சேவைக் காலத்தில் தாபன விதிக்கோவையின் இரண்டாம் அட்டவணையின் கீழ் காட்டப்பட்டுள்ள குற்றமொன்றை புரிந்த பின்னர் 05 ஆண்டு காலம் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

19:5 அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்றவர்களையும் தமது சேவைக்காலத்தில் தாபன விதிகோவையின் முதலாம் அட்டவணயின் கீழ் குறிப்பிடப்பட்ட குற்றமொன்றுக்கு ஒழுங்காற்றுத் தண்டனை பெறாத அல்லது தமது சேவைக் காலத்தில் தாபன விதிக் கோவையில் இரண்டாம் அட்டவணையின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள குற்றமொன்று புரிந்த பின்னர் 05 ஆண்டு காலம் திருப்பதிகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்துள்ளவர்களுமான, பதவி நிலை அலுவலர்களாக பத்தாண்டுகள் அல்லது அதற்கு மேற்பட்ட சேவைக் காலத்தை உடையவர்களுமான நபர்களையும் சட்டத்தரணிகளையும் கொண்டுள்ள ஒழுங்காற்று விசாரணை அலுவலர் குழாம் ஒன்றை சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கேற்றவாறு திருத்தி அமைத்து அதனைத் தொடர்ந்து அரசாங்க நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சுச் செயலாளரால் பேணிச் செல்லுதல் வேண்டும். அதேபோன்று அவ்விசாரணைக் குழாம் தொடர்பான விபரங்களை இடைக்கிடை அமைச்சுக்களின் செயலாளர்கள் திணைக்களத் தலைவர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட மற்றைய அதிகாரிகளுக்கு எழுத்து மூலம் அறிவிப்பது அரசாங்க நிர்வாக விடயங்களுக்குப் பொறுப்பான செயலாளரின் பொறுப்பாகும்.

03. அதே போன்று இது வரை அரசாங்க நிர்வாக சுற்றறிக்கைகள் மூலம் வெளியிடப்பட்டுள்ள ஒழுங்காற்று அலுவலர்களின் பெயர் அட்டவணைகள் மறு அறிவித்தல் விடுக்கும் வரை அவ்வாறே வலுவிலிருக்கும்.

ஒப்பம்/டி.திசாநாயக்க
செயலாளர்,
அரசாங்க நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு.